உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# திருவையாற்றுச்
# சப்தஸ்தலப்பதிகம்.

இது
தஞ்சைமாநகரைச்சேர்ந்த
கூனம்பட்டி
அம்பலகாரர் மகா-௱-௱-ஸ்ரீ
சா. குமாரசாமிமேற்கொண்டாரவர்களால்
இயற்றியது.

இஃது
தஞ்சை கொள்ளுப்பேட்டைத்தெரு
தமிழ்ப்பாடசாலை மகா-௱-௱-ஸ்ரீ
மு. கோவிந்தசாமி உபாத்தியாயரவர்கள்
வேண்டுகோளால்

தஞ்சை
"ஸ்ரீ வித்தியாவிநோதினி அச்சுக்கூடத்தில்"
பதிப்பிக்கப்பட்டது.

1902-ஷு தநுர்மீ.

T. 12832

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

திருவையாறு ஸ்ரீமத் சதானந்தசுவாமிகள்
மாணாக்கராகிய
தஞ்சை தமிழ்வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

## M. கோவிந்தசாமி உபாத்தியாயரவர்கள் இயற்றிய

நேரிசை யாசிரியப்பா.

சீருலாத் திருமா லிந்திர னியங்குங்
காருலா நிலமார் காமலர்ந் தலரு
மெல்லையி னன்கழ கெழிலுறு மியல்பாய்
நல்லறந் தருமொரு நற்கணம் பட்டி
தன்னில் வாழுந் தனவான் குணமலிந்
துன்னுங் குமார சாமி யெனும்பதி
சித்தம துருகிச் சிவன்கழ லினைந்தே
பத்தியாய்ச் சந்தத் தலப்பதி கந்தனைப்
படிக்கவும் பாடவும் பாலமு திதுவெனத்
துடிக்காத் தரற்கடி துதித்தக மகிழ்ந்து
அருளுரை யாமென் றதிசய முறவே
தெருளுற விசையைச் சேர்த்துநற் பனுவ
லெழுத்தசை சீர்தளை யடிதொடை யாப்பின்
வழுத்திய வழியினின் வழுவிலா தினிய
சொல்லமைத் தியற்றினன் றூய
நல்வ னுமென நானிலம் புகழ்வே.

---

தஞ்சாவூர் தாலுக்கா புலவனத்தம்
ரிஸல்டுஸ்கூல் மானேஜரும்
தலைமை இலக்கண உபாத்தியாயருமான

## M. பொன்னுசாமி பிள்ளையவர்கள் இயற்றிய

இரட்டை எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சோதியேறையாறு பழனந்திருச்சோற்றுத் துறையினெடு வேதி குடி
சொல்லரியகண்டியூர் திருத்திநெய்த்தானமெழு குழல்வா முரனை யேத்
கோதிலாச்சத்தத் தலப்பதிகமாலையது கூறினன் பவ மாறினன்
[illegible]வலயந்தன்னிலுயர் பட்டிபதிநெட்டிலினிற் குலவு [illegible]

நீதியானிந்திர குலத்தின்மேற்கொண்டுளா னிதிகந்த சாமி தமையன்
இறைதவத்துதித்தகான் முனிராஜபாடையொடு நீடமிழின் மிகு வன்மை
பாதியாமதிசூடி யடியவர்க்கடிமையான் பனுவல்பல் லாயு மதியான் [யான்
பதுமமுறழ் கண்ணினன் பார்குமரசாமியாப் பகரியற் பெயரினனே.

---

இஃது

தஞ்சைமாநகரம் தமிழ்வித்தான் மகா-௱-௱-ஸ்ரீ

## செ. மாணிக்க உபாத்தியாயரவர்கள் இயற்றிய

ஆசிரியவிருத்தம்.

தமருகாதி தோட்கொண்டார் சங்கரன்பொற் பாதமதிற்
  தழுவு கொண்டார்
அமராதி கேட்கொண்டா ரங்கிலேய பாஷையருந்
  தமிழுங் கொண்டார்
சமரசாதி மேற்கொண்டார் சத்ததலப் பதிகமதைத்
  தருதல் கொண்டார்
குமாரசாமி மேற்கொண்டார் குணமலியும் வேதாந்த
  குரிசி லோரே.

---

தஞ்சைமாநகரம் கருந்திட்டையங்குடி.

தமிழ்வித்வான் வெண்பாப்புலி

மகா-௱-௱-ஸ்ரீ

## மரு. கண்ணுசாமி செட்டியாரவர்கள் இயற்றிய

வெண்பா.

பத்திநல மார்மூவர் பாடல்பெறு மையாற்றுச்
சத்தத் தலப்பதிகஞ் சாற்றினன்—நித்தமலர்
மாமிருக்கூ ணம்பட்டி மன்னிவா ழுங்குமர
சாமிமேற் கொண்டான் சகத்து.

---

வல்லம்

தமிழ்வித்வான் பாகவதர் மகா-ள-ள-ஸ்ரீ

## தியாகராஜபிள்ளை யவர்கள் இயற்றிய

### ஆசிரியவிருத்தம்

காவிரிபொன் கொழிக்கும்வளச் சோணாட்டிற்
 பகவனருள் காலனகவேமா
காவிரிதேன் பூவடியிற் சாற்றிடுங்கூ னம்பட்டி
 காவ லன்வா
காவிரிதலொடுசாமி நாத நற் றவத்தினிற்
 கனிவி னாற்பூங்
காவிரிந்தனா யர்ந்தமைத்து புத்திரனா யுலகுதித்த
 கருணைவள்ளல் (௧)

மஞ்சுதிரு வையாறர் மேடவிசா கந்தனிலே
 மாண்பி னோடு
மஞ்சுலா வருகின்ற சப்ததலப் பதிகமதை
 மகிழ்ச்சி யோடு
மஞ்சுறவோ ருளமணக்க நாமணக்கப் பதிகமதாய்
 வகுத்துப் பூவில்
மஞ்சுமிக ராய்க்கவித்தேன் மாரிபொழிந் தான்குமர
 சாமி மாதோ. (௨)

---

சித்திரகுடி

## வா. சிவசாமிதென்கொண்டாரவர்கள் இயற்றிய

### வெண்பா.

சித்த னருள்கூட நிமலனை யாறமுதச்
சத்தத் தலப்பதிகஞ் சாற்றினான்—இத்தலத்தில்
நற்கூனம்பட்டி நவில்சாமி நாதனருள்
சற்குமர சாமியே தான்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவையாறு

# சப்தஸ்தலப்பதிகம்.

## விநாயகர் துதி.

வெண்பா.

பார்பரவுஞ் சத்ததலப் பண்பதிகந் தானியற்றி
யேர்பரவு மெம்மானை யேத்திடவே—கார்பரவுந்
தந்திமுகத் தொந்திவயற் றைந்துகரத் தெந்தைதன்
கந்தமலர் காற்றுணையே கா.

## அவையடக்கம்.

ஆனையுரித் தான்மே லன்பாக யான்பாடல்
தேனையுகந் தற்றோர் தீமுடவன்—நானிலத்தில்
குற்றமாய்க் கொள்ளார் குழந்தைச் சிறுமொழியைப்
பெற்றோ ரிகழ்வாரோ பேசு.

---

# திருவையாறு

---

சோன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்
என்ற பண்போலப் பாடவும்.

அந்தணருமமரர்களோடமலமுறுஞானிகளுஞ்
செந்தமிழின்பனுவலிசைதெரிந்துணர்ந்தசீரியரும்
வந்தனைகள்மிகப்புரிந்துவாழ்த்துகின்றவையாற்றிற்
பந்தமறுத்தாளவெழும்பவநாசரிவராமே. (க)

அப்பணிந்த வேணியனாரவார்த்தபுண்ணியனார்
தப்பணிந்ததிருக்கரத்தர்தாளேற்றுந்தனிகடத்தர்
துப்பணிந்ததிருமேனிதுவண்டொழுகுத்திருநீற்ற
ரப்பருக்கங்கையாற்றிலருள்சிவனாரிவராமே. (உ)

அறம்பொருளாமின்பமுடனரியபெரும்வீடடைய
மறநெறியேவிரும்பாதுமாயைதனிற்றிரும்பாது
திறமனமாய்நிற்கின்றசிருடையாராவாரைப்
நெகிழவிடாப்புண்ணியனாரிவராமே. (ங)

ஆசையெல்லாமறந்தியருள்பெற்றசிவனடியோ
லோசையுறத்தானமர்ந்தங்குறங்குகின்ற காவேரி
தேசுபெறவேவிளைந்துத்தினமூழ்குமன்பர்கடம்
மாசுகளைந்தாளுகின்றமாமன்னரிவராமே. (௪)

வண்டுசென்றிசைபாடும்வளவயலிற்றேன்பாய
கண்டுகேண்மகிழ்ந்துதிகழ்காவேரியாறுடையார்
பண்டடியார்செய்தவினைபாசமறுத்தாளுடையா
ரண்டர்பணிகொண்டுடையாரையாறரிவராமே. (௫)

செம்பவளசிவசோதிதேசுபெறுமறையாதி
நம்புமடியார்க்கோதிற்பதமீந்தருணீதி
யம்புவியிலாசைகொண்டலைந்துழலுமிடுக்கணெனுங்
கம்பலையைக்களைந்தாளுங்கண்ணுதலாரிவராமே. (௬)

சென்னியுமோராங்கையாஞ்சென்னியிலார்கங்கையாஞ்
சென்னியால்பலியேற்பார்திகழ்சலத்தாற்பவந்தீர்ப்பார்
வன்னிதிகழ்செங்கையார்வாழ்வளிக்குங்கருணையினா
ருன்னுபவர்பிறப்பறுப்பாருத்தமனாரிவராமே. (௭)

அண்டமுழுதாண்டுகேந்தவரக்கன்றனையவத்தைக்
கண்டுதம்பெருவிரலாற்கலங்கச்செய்வலிமையினார்
பண்டரங்கர்பாசபதர்பணியசைத்தப்பருந்தோள
ரண்டர்தொழுமையாற்றிலமர்சோதியிவராமே. (௮)

பொய்யானவாழ்வகற்றிப்போதகுருவருளாலே
மெய்யானவாழ்வுற்றுவிளங்குதிருத்தொண்டர்குழாங்
கையாரத்தொழுதேத்தக்கலிவினையைக்கடிந்தகற்ற
வையாற்றிலெழுந்துறையுமருஞ்சோதியிவராமே. (௯)

தீராதநோய்தீர்க்குந்திருவையாறமரண்ணல்
வாராதவாழ்வினைத்தும்வந்துதவும்வள்ளலவர்
பேராதபெரும்பயனைபேருலகோர்பேசுங்கால்
தாராததொன்றுண்டோதந்தருளுந்திண்ணமே. (௰)

### இதுவுமது

ஓர் மானுடத்தலைவி திருவையாற்றுத்
தெய்வத்தலைவனைக் கூடித்தணந்த
துயராற்றாது தூதனுப்புதல்.

காராரும்பூங்கர்விற்களித்துறையுங்கார்வண்டே
சீராருமையாற்றிற்சிறந்திலங்குஞ்செம்மலவன்
ஏராருமென்றனையினிதுடனேசியணைந்து
யாராரும்பழியுரையைப்பண்புறவேபேசாயோ.

இஞ்சுகவாயஞ்சுகமேகேளாய்காண் கூறுமொழி
வஞ்சமிலாதென்றன்வயின்வரலகன்றகள்வனவன்
அஞ்சொல்லார்தான்பயிலுமையாற்றிலண்ணல்
தஞ்சமென்றவென்றனுக்கோர்தனித்தயையைதாராளே. (௧)

பூமாவிற்பொலிந்துறையும் பூங்குயிலேபுகலக்கேள்
மாமாலென்றுரைவிடைமேல்வந்துமறைந்திகள்வன்
தாமாவென்றாருருந்தனித்தனியேதலையேற்குங்
கோமானைக்கண்டொருகாலென்குறைநீகூறாயோ (௨)

வாவிதொறுமிறைதேறிவளம்பெறுநன்மடநாராய்
தாவியுயிரேற்றுகின்றதருமதுரைபாலடைந்து
காவியகண்கண்ணுடன்கழிதுயரைக்கட்டுரைத்து
மேவியம்போனில்லாதங்கோதுவீரென்மொழியே. (௩)

விண்ணுறவேமேலோங்கிவிந்லைதபுரிமுகிலினங்காள்
தன்னுறநின்குணமவர்க்குத்தானுளதாலியானுரைத்தேன்
பண்ணுறவேபாடுமன்பர்பாடமரும்பரமர்க்கே
யெண்ணுறவேயையாற்றிலென்துயரையியம்பாயோ. (௪)

பெண்சாபமேற்றதோர்பேதைமையாற்பெருநதியே
மண்மீதின்மாணழிந்துமாதேவன்பாலடைந்தாய்
தண்ணென்றேதன்றலையிற்றரித்துகந்ததலைவர்க்கே
யென்சாபமேற்குமென்றெடுத்துரைப்பாயிப்போதே. (௫)

செங்கையினிற்சிறப்புற்றேதிகழ்கின்றசெம்மானே
கங்கையெனவையகத்தார்காதலிக்குஞ்சல்மானே
மங்கையெனவோர்பாகம்மருவிநிகழ்மலைமானே
யிங்கோநானோர்பேதையேழைமையையேற்பீரோ. (௭)

பைங்கோல்முடிதிருந்தபார்வேந்தர்முடிதிருந்தும்
அங்கோலமாருடையவருநதியையணிந்துகந்த
பொங்கோசை தானீங்காபுண்யதிருவையாற்றிற்
செங்கால்வெள்ளோதிமமேசென்றோதாய்செறிதுயரே. (௮)

தண்டரளமுல்லைமுகைமுருந்தடியபுன்னகைய
தொண்டைவாய்மதியமெனத்துலங்குமுகத்தொண்டொடியே
பண்டாரங்கர்பாற்போனபாவிகளைக்காண்கிலேனே
கண்டுமொழிமாதரசேகண்டுவாயிப்போதே. (௯)

சந்துமிகநான்விட்டேன்தனித்தலைவன்வரக்காணேன்
வந்தனையேயடைவதற்கோர்வகைதுறையைக்காணேனு
விந்திலங்குஞ்சடையீரோயெழிலையாற்றுடையீரே
[illegible]ங்குநதியீரேயென்றழைமின்னங்கையரே. (௰)

# திருப்பழனம்

சங்கர சிவசிவ மாதேவா எங்களை யாட்கொள வாவாவா என்றபாடற்போற் பாடவும்.

பண்ணார்பாவினுடனேறும்
மண்ணார்வலஞ்சூழிடமாகுந்
தண்ணார்மதியந்தான்றவழுந்
திண்ணார்மதிலுயர்பழனம்மே. (௧)

கழற்காலாலொருகாலனையே
விழக்கீழுதைத்தவரிடமாகும்
அழற்காற்கொண்டேயவியோம்பும்
முழக்கமொழியுருப்பழனம்மே. (௨)

காடேவீடாயுறைபவனார்
மாடேயூர்ந்துமயல்தருவார்
வீடேயடியார்க்களிப்பவனா
ருடேயுறையும்பழனம்மே. (௩)

வன்னிகங்கைவைத்தார்க்கு
மன்னிப்பூவிலுறையிடமாம்
பன்னிப்பத்தரேத்துநின்ற
கன்னிப்பூசூழ்பழனம்மே. (௪)

கமலமலரினுறைவானுங்
கமலக்கண்ணனுந்தேடி
மமலனன்போடமரிடமாங்
கமலமலரும்பழனம்மே. (௫)

நித்தஞ்சடையினிலாதவழும்
நிர்த்தனத்தனிடமாகும்
பத்தர்பண்பினுடனேத்துஞ்
சத்தம்பயிலும்பழனம்மே. (௬)

எங்கும்பலியேற்றுண்பவராங்
கங்கைத்தலையாரிடமாகும்
பொங்குங்காவிரிதிரையோடுந்
தெங்கங்காயலைபழனம்மே. (௭)

முத்தலாமையிலாகம்
சித்தமணிந்தோரிடமாகும்
முத்தந்தத்துந்திரைசூழ்ந்த
பத்தர்போற்றும்பழனம்மே.

இந்துவிலங்குஞ்சடைமேலோர்
நந்தாவினைதேர்நாரைத்தூ
வந்துவுறையும்பரற்கிடமாஞ்
சந்துவனமார்பழனம்மே. (௯)

கன்னல்மொழியுமையாளையோ
ரின்னலின்றியிடம்வைத்தார்
கன்னல்வேளையெரித்தவனூர்
மன்னுஞ்செந்நெற்பழனம்மே. (௰)

---

## திருச்சோற்றுத்துறை.

---

மையாடியகண்டன்மலை மகள்பாகமதுடையான்
என்ற பண்போலப்பாடவும்.

செய்யாருநறைபோதிலொருசெம்மைமிகவுடையான்
செய்யாருறுபோதிற்றிகழன்னவுருவாகி
மெய்யாரணியரவமிகவார்த்தார்தனைத்தேடும்
மெய்யார்பணியிடமாவதுசோற்றுத்துறையாமே. (௧)

பார்க்கண்மிகப்பணிந்தேதினம்பரவித்தொழுதுறையும்
சீர்த்தனுறுமிடமாவதுசெய்யார்கமலத்தி
லார்த்தஞ்சிறைப்பெடையோடுறையனமார்புடைசூழ்ந்த
தீர்த்தனுமைதன்னோடுறைசோற்றுத்துறையாமே. (௨)

மட்டார்குழன்மங்கையொடுமென்னியொருகானிற்
றட்டேபுரிதிறனையவன்றனையேமிகநடந்து
பிட்டாலொருபிரம்பினடிபெரிதேகழிபட்ட
நட்டார்தொழுநம்பனிடஞ்சோற்றுத்துறையாமே. (௩)

மையாருறுசோலையினின்மயில்களவையுறங்குஞ்
செய்யாருறுசெழிப்போடுநெல்லணமேதினந்துயிலும்
கையாற்கரியுரித்தாள்பவன்கனமாயுறையிடமே
மெய்யாரடிமெய்யாற்பணிசோற்றுத்துறையாமே. (௪)

நரியாடியசுடலையினில்நண்போடுறுபேயு
மெரியாடியபெருமானினிதாகவுறையிடமா
மரியாடியகண்ணார்கிளையன்போடுடன்பயிலும்
வரியாடியசோலைமிகும்சோற்றுத்துறையாமே. (௫)

மஞ்சோங்கியகாவிலுயர்மாமேற்குயிற்கூவும்
நெஞ்சோங்கியவடியார்தினம்நிமலமுடன்பரவும்
நஞ்சோங்கியகண்டன்மிகநாளும்பெரிதுறையும்
அஞ்சோங்கியவளமேநிறைசோற்றுத்துறையாமே. (௬)

அறிவோணியுடையார்தினமன்போடெப்பயிலும்
மறியேமிகவுடையார்மழுமகிழ்ந்தேகரம்வைத்தார்
தறியேயுறுகண்ணற்கொருதழலாழியைத்தந்தார்
செறிவோடுறையிடமாவதுசோற்றுத்துறையாமே. (எ)

பாளைவிரிகமுகின்றிறம்பருமீனினம்பார்த்து
வீளைப்படுகினில்மீதுகண்டிலங்குங்கனியுகுத்தல்
வேளைத்தொழுமாதர்மிடறிதுவோவிகராமென்
றுளையுடையண்ணலுறைசோற்றுத்துறையாமே. (அ)

வஞ்சமணமாதர்மொழிவழியாய்ப்பணியன்மின்
அஞ்சுநடையுடையாரவராசைத்தொடர்ப்பறுமின்
பஞ்சின்மெலியடியாருடையகமேனியையன்மின்
கஞ்சமலர்க்கழலானுறைசோற்றுத்துறைசேர்மின் (கூ)

சோற்றுத்துறைமேயவொருசொக்கன்றிறந்தானே
யேற்றித்துதிசெய்மின்பதமெழிலும்பெறலாகும்
மாற்றுத்துறைவழிகொண்டுமைமாயாமுனம்போற்றும்
ஆற்றுத்துறையுடையானடியன்போடுறமனனே. (ய)

---

## திருவேதிகுடி.

---

பித்தாபிறைசூடி பெருமானேயருளாளா
என்ற பண்போலப் பாடவும்.

தண்ணார்மதிசூடிதரியாதார்புரமெய்தாய்
கண்ணார்திருநுதலாய்கறைகண்டமிடறுடையாய்
மண்ணார்வலஞ்சூழ்திருவேதிகுடிமேயாய்
அண்ணாவுனதடியேனெனையாளிலருளாமே (க)

கடியார்மதில்மூன்றும்திருக்கண்ணாலெரிசெய்தாய்
அடியார்தினம்பரவித்தொழுதரணையிணைந்தகலா
வடியார்மழுவுடையாய்திருவேதிகுடிமேயாய்
அடிகேளுனதடியேனெனையாளிலருளாமே. (உ)

தண்டார்திருக்கொன்றைமுதல்தரித்தாள்திருத்தலைவர்
கண்டார்சிரம்கூப்பித்தொழுதகலாநெறிசேர்வார்
வண்டார்பொழில்சூழ்திருவேதிகுடிமேயாய்
அண்டாவுனதடியேனெனையாளிலருளாமே. (ங)

முத்தாமுறைப்பாடி முழுமையுமே நினைகிற்பார்
சித்தா செழுஞ்சோதி சிவனேயா பவநாசா
கொத்தார் பொழில்சூழ்ந் திருவேதிகுடி மேயாய்
அத்தா வுனதடியேனையாளிலருளாமே. (ச)

மையார் கறைகண்டா மறையோதுந் திருவாயா
கையாரயன் சிரத்தாய் கழற்காலானமனுதைத்தாய்
செய்யார்வளஞ்சூழ்ந் திருவேதிகுடி மேயாய்
ஐயா வுனதடியேனையாளிலருளாமே. (ரு)

தெங்கங்குலை கமுகார்கனி தேமாவொடுவாழை
பொங்கும் நறவோடு மிகப்புரளுங் கரைசேர்ந்து
அங்கோர்வியப்பாக்குந் திருவேதிகுடி மேயாய்
எங்கோனுனதடியேனையாளிலருளாமே. (சு)

விரலாலொருவிறனை வெருவிரைவில் வினைசெய்தாய்
இரமோவென்றழலுங்கணி திரும்ப அருள்பெய்தாய்
வரமேதினந்தருகுந் திருவேதிகுடி மேயாய்
அரனேயுனதடியேனையாளிலருளாமே. (எ)

மறமார்கரியதளாய் மயல்மதனையெரிசெய்தாய்
வரையாரெழில்மங்கையொடும் மன்னியுறைசெய்வாய்
விரையார்பொழில்சூழ்ந் திருவேதிகுடி மேயாய்
அரையாயுனதடியேனையாளிலருளாமே. (அ)

அப்பார்செழுஞ்சடைமேலுயர் அரவமிகவைத்தாய்
கப்பார்திருச்சூலமொடு கொக்கின்சிறகார்த்தாய்
வப்பார்பொழில்சூழ்ந் திருவேதிகுடி வாழும்
அப்பாவுனதடியேனையாளிலருளாமே. (கூ)

வீடுந்தொறுந் தேடிப்பலிவிழையும் பெருந்தலைவன்
ஆடுந்தொறும் அருமாமறை தேடித்திரி தேசன்
காடுந்தொறுங் கணத்தோடுறப்பாடித்திரி பரமன்
வாடுந்தொறும் வேதிகுடியானை நினைவல்லோம். (ய)

---

## திருக்கண்டியூர்.

---

வடிவுடைமழுவேந்தி மதகரியுரிபோர்த்து.
என்ற பண்போலப் பாடவும்.

பணியணிமதியேந்திப் பெருங்கரியுரிபோர்த்து
மணியுடைதிருக்கோவில் மகிழ்ந்துறவுமையோடும்
தனிநடம்நடத்தவனே தண் திருக்கண்டியூரில்
கனிவுடனெழுந்தவனே கலிதுயர்தீர்த்தவனே. (க)

கங்கையைத்தான்தலையில்களியுறக்கண்டவனே
மங்கையர்தினம்பயிலும்மஞ்சுயர்சோலையின்பால்
தங்குனர்க்கருள்புரியும்தண்திருக்கண்டியூரில்
இங்கெனைக்காத்தருளும்எழிலவருறைவாரே. (௨)

பேய்ப்படையுடனோடும்பெருங்கணமுஞ்சூழ
மாய்த்தலையறியாதமங்கையாள்தானிடமாய்
ஏய்த்தவரமர்கின்றஏந்தலாருறைவாகும்
தாய்த்தன்னருள்போன்றதண்டிருக்கண்டியூரே. (௩)

பழமார்சோலையினுள்பண்புடன்இனிதேரும்
அழகார்அன்னங்கள்அஞ்சிறைப்பெடையுடனே
தளமுடனிருக்கின்றதண்திருக்கண்டியூரில்
அழகனார்அவர்தாமேஅன்புடனுறையாரே. (௪)

சங்கமுமுடன்சூழும்சலஞ்சலம்தான்முரலும்
தங்கமுமுத்துடனேதகையுறகொழிக்கின்ற
பங்கமில்கண்டியூரில்பண்புடனினிதமரும்
அங்கமேதான்றரித்தவையரவராமே. (௫)

பிரமனார்தலையைபெரிதேதான்கொய்து
கரமதில்மிகவேற்றுகரியதனுரிபோர்த்து
உரமுறவூர்தோறும்உண்பலியேற்பவனார்
வரமிகுகண்டியூரில்வளமுறவாழ்வாரே. (௬)

பத்தர்கடாம்பரவும்பண்புறுகாவிரியில்
முத்தத்தொடுபவளம்மொய்யுறக்கொழிக்கின்ற
சத்தமேமிகக்கேட்டுசலத்தினில்ஒளிக்கின்ற
முத்தம்பணமார்ந்தமொய்ம்புறுகண்டியூரே. (௭)

மாதுலனாகிவந்துவளம்பெருமதுராயினில்
கோதறக்கொள்வழக்குக்குறைவறத்தீர்த்தவனை
ஏதமிற்கண்டியூரில்இனிதுடன்ஏற்றுவார்
நாதனார்தண்ணளியால்நமன்வந்தணுகானே. (௮)

மதிதவழ்சோலையினில்மழலைச்சொற்கிளிகள்
விதியொடுபயில்கின்றவேதமொழிகேட்டு
மதியொடுதினமறையும்வண்மையார்கண்டியூரில்
நிதிபெறுசெல்வனார்நீடுறவாழ்வாரே. (௯)

அம்பிகைதன்னோடும்அருமறைதான்போற்ற
பம்பியேயமர்கின்றபரமனார்தம்பதமே
வம்புறுபொழில்சூழ்ந்தவளமிகுகண்டியூரில்
நம்பியேயிருப்போர்க்குநலிதுயரணுகாதே. (௰)

# திருப்பூந்துருத்தி.

சோற்றுணைவேதியன் சோதியானவன்,

என்ற பண்போலப் பாடவும்,

அந்தணராரியரமரரோடரனடி
சிந்தனைசெய்துமேசிறப்புற்றோங்கினோர்
வந்தனையகலுருவளம்பெறுதுருத்தியுள்
மைந்தனைநினைப்பவர்மறலியையொறுப்பரே. (௧)

முத்தமும்பவளமும்மொய்யாரகிலுடன்
நித்தமேகரையுறும்நீர்வளக்காவிரி
உத்தமர்தான்தொழும்உயர்வுடைதுருத்தியுள்
அத்தனைப்பணிபவரறுப்பரால்வினையுமே. (௨)

வண்டுமேகிளறியவளமுறும்பூமது
கொண்டுயர்நெல்விளைகுற்றமில்துருத்தியுள்
தொண்டரின்பவவினைதொகையுடன்தொலைப்பவர்
கொண்டலைத்தொழுபவர்குறைவிலாதவரே. (௩)

தெங்குறுகாய்களைத்திரளுடன்உகுத்துமே
பொங்கியபுனலினிற்புரண்டெழுவாளைகள்
சங்கமும்முரலுறும்சலஞ்சூழ்துருத்தியுள்
அங்கனைத்தொழுபவரறுப்பவர்வினைகளே. (௪)

கஞ்சமலரினில்களித்துறைஅன்னமே
மஞ்சுறப்பொருந்தியமயில்பயில்காவினுள்
துஞ்சியேயிருந்தருள்தொழிலுறும்துருத்தியுள்
நஞ்சனைப்பணிபவர்நாளும்வாழ்பவரே. (௫)

பத்தரின்பவவினைபற்றறப்போக்குவர்
இத்தாம்பின்மலர்நீள்சடைப்புனலவர்
அத்தமாரணங்கவர்அழகார்துருத்தியுள்
சித்தமாயுறைந்துமேசீருடனிருப்பரே. (௬)

வெள்விடையூர்ந்தவர்விதித்தலைகொய்தவர்
கள்ளவிழ்காவினுள்காதலாய்தங்குவர்
மள்ளரின்உழவொலிமாயாத்துருத்தியுள்
விள்ளவேயிருப்பவர்வினைகடீர்ப்பவரே. (௭)

காலனையுதைத்தவர்காமனையெரித்தவர்
பாலனைப்பண்புடன்பைங்கறிவினவினர்
சீலர்கடாம்தொழும்சீருயர்துருத்தியுள்
ஆலமுமுண்டவரன்புடனிருப்பரே. (௮)

துருத்தியுள்மேயவர் தொல்வினைதீர்ப்பவர்
நிருத்தமேபுரிபவர்நித்தலுமேத்துவார்
வருத்தமேபோக்குவர்வாழ்வுமேயளிப்பவர்
ஒருத்தலையுரித்தவரும்பருக்கரசரே. (௯)

கண்ணனுக்காழியைக்கனிவுடன்தந்தவர்
வண்ணமுந்தவளமாய்வளமுடனிருப்பவர்
அண்ணலென்றேத்துவாரருவினைநீக்குவர்
தண்ணமாந்துருத்தியுள்தையலோடிருப்பரே. (௰)

---

# திருநெய்த்தானம்.

---

நன்றுடையானை தீயதில்லானை நரைவெள்ளே
என்ற பண்போலப் பாடவும்.

வண்டிசைபாடும்வளமுடைசோலைமணஞ்சூழ்ந்த
தண்டலைதோறும்தாள்மயிலாடும்நெய்த்தானம்
கொண்டிடையானைகூறுவார்தமதுகொடுவினையே
அண்டிடமில்லாதழுவறுப்போடும்அகலுமே. (௧)

ஏலவார்குழலாள்எந்தலோடுறையும்இனிதுடைய
நீலமும்நெய்தலும்நிலவியகஞ்சமும்நிறைபணைசூழ்
கோலநெய்த்தானம்குறைவறுமனத்தால்கொள்வார்தம்
சீலத்துக்கிணையாய்செப்புதலாகும்சிவபதமே. (௨)

அரக்கனுக்கோர்வாளன்புடனீந்த அண்ணல்தாம்
தரக்கினதுரியைதனாமிசையுகந்துதரித்தார்க்குறை
குரக்கினய்சோலைகொள்பழமுகுத்துகூய்த்திரியும்
சுரக்குதலகலாதுய்மதுபொழில்சூழ்நெய்த்தானமே. (௩)

கற்றவர்சூழ்தரும்காவிரியாற்றினில்களிமனத்தோ
டுற்றவருறுதியாய்உம்பருக்கரசனைஊக்கமாய்
நற்றவமனத்தால்நாற்றிசைவணங்கும்நெய்த்தானம்
உற்றவர்க்கென்றும்உறுபழவினையேஓடுமே. (௪)

சோமனைத்தரித்தாள்சுந்தரன்றன்னைசுரிகுழலுமையின்
வாமனைத்துதியாய்வையகமதனில்வளம்பெறவே
கேமமாய்நினைப்பார்நித்தமுமகலாநெய்த்தானம்
காமமாயணைவார்காலனூர்வாதைகடப்பாரே. (௫)

அழற்பிழம்பானை அறிகுறியானை அன்போடும்
மழவிடையேறிமகிழ்வுறுவானைமயில்சூழ்ந்த
பழமுதிர்சோலைபயில்நெய்த்தானம்படிந்தானை
தொழப்பெறுமடியார்தொடருறும்வினையைதுடைப்பாரே. (௬)

முன்றில்கடோறும்முழுமதிதவழும்முறையுடைய
அன்றில்களாரும்அல்லிருட்சோலைஅணித்தாய
வென்றியாருடையவிழுநெய்த்தானமேயானை
நன்றியாய்நினைவார்நாடோறும்நமனைநசிப்பாரே. (எ)

மூர்த்தியாயுள்ளான்முழுநீறணிந்தான்முறைபாடி
சீர்த்தியால்நினைவார்சிவக்கொழுந்தலைனசெல்வமாய்
ஏத்தியேதொழுவாரெழினெய்த்தானம்இன்புடனே
போற்றியேபணிவார்போக்குவராகும்புதுவினையே. (அ)

மறலியார்வர்துமாணுயிர்கவராமுன்னம்மே
திறமுறப்போற்றும்தீவினைதீர்திருத்தலைவனை
நிறமுமேபவளம்கீறுடையானைநெய்த்தானம்
பரவியேயிருப்பார்பவவினைபோக்குபவராமே. (கூ)

தையலார்வலையினில்தறிப்பட்டிடாமுனம்தனாமிசையே
நெய்யாடியானைநெய்த்தானத்தில்நிறைவுடனே
கையுலாங்கரியைகஞ்சுகமாகக்கண்டானை
மெய்யுறத்தொழுவார்மேம்பெருங்கைலைமேயாரே. (ய)

வாழி சப்தஸ் தலமுற வாழ்பதி
வாழி யரங்கா சாரியின் வார்கழல்
வாழி வெட்வார்டு கோனிந்த வையகம்
வாழி யருமறை யோர்களும் வாழியே.

---

## நாமாவளி.

சங்கர சங்கர சங்கரனே
சங்கர சங்கர சங்கரனே.

1. விடைமிசைவந்தருள் வேதியனே
வேதம்தினம்தொழும் நீதியனே.

2. அருமறைக்கெட்டா ஆதியனே
அருவினைதீர்த்தருள் சோதியனே.

3. அம்பலச்சிற்சபை ஆண்டவனே
அடியார்க்கருள்வரம் பூண்டவனே.

4. வேதன்மால்அறியா நீண்டவனே
ஏதம்அறுத்தா ளாண்டவனே.

5. நமவாதைமெத்தவும் பொல்லாதே
நாயேனைக்காட்டியே கொல்லாதே.

6. நமன்வந்தாலென்னைக் கோபிப்பான்
நல்லருள் தந்திடில் பாவிப்பான்.

7. காலபாசத்தாலென்னைக் கட்டாமே
கார்த்தருள்கரமே ஓட்டாமே.

8. கரியுரிபோர்த்திடும் கண்ணியனே
பரிநரியாக்கிய புண்ணியனே.

9. பத்தர்க்கருளுரை சொன்னவனே
நித்தம்எனையாள் மன்னவனே.

10. அம்பிகைமின்னுளமரிடமே.
நம்பியேவந்தேன் பாரிடமே.

11. சோதிக்கவேண்டாம்நான் சொன்னேனே
நீதிக்கோர்களஞ்சிய மன்றேனே.

12. மன்றினுள்ளாடிய மணிமருந்தே
என்றனுள்எப்போதும் உறைவிருந்தே

13. நரிபரியாக்கிய சேவகனே
எரியாடவேயென்றும் வியாபகனே.

14. தக்கனின்வேள்வியை அசைத்தவனே
மிக்கவேமறிமுகம் இசைத்தவனே.

15. எல்லாம்வல்லசித் தானவனே
நல்லாரெவர்க்கும்வித் தானவனே.

16. ஆதிநீதியருட் பெருஞ்சோதி
சோதியாதெனையாண் டருள்நீதி.

17. பாதிமதிதரித் தருள்சோதி
நீதியம்பிகைக் கருள்வாதி.

18. சங்கரசங்கர சங்கரசம்புவே
பொங்கரவணிந்தருள் சங்கரசம்புவே,

19. அங்கஜனை அழற்கண்ணால் வென்றவனே
சங்காசங்கர சங்கரனே.

20. பாரோர்தினம்புகழ் தேசிகனே
பரமபதமளித்தருள் வாசிகனே,

21. நோயால்நலிவுற்றேன் ஆண்டவனே
மாயாவரம்தந்தருள் தாண்டவனே,

22. யாரும்கதியில்லை ஆதியனே
வாரும்விடைமிசை சோதியனே

23. பெற்றோர்பிறந்தாரைக் காணேனே
உற்றாருனையன்றி காண்தானே.

24. பிணியால்வருத்தமே யுற்றேனே
மணியாமருந்தினைப் பெற்றேனே.

25. ஆங்காரதத்துவம் அற்றேனே
ஓங்காரத்துட்பொருள் உற்றேனே.

26. பாதிமதியணி பாக்கியனே
சோதித்திடாதருள் யோக்கியனே

27. சிவகாமிக்கொருபாகம் தந்தவனே
பவம்நீக்கியாளவே வந்தவனே.

28. பிள்ளைக்கறிமிக சமைத்தவனே
பிள்ளைமதிச்சடை அமைத்தவனே.

29. துன்பக்கடலினுள் தோய்ந்தனன்யானே
இன்பமேதந்தருள் இறைவஎங்கோனே

30. தையலார்வலையினில் தியங்கினேன்யானே
மையல்தவிர்த்தாளும் மலைமகள்கோனே.

31. பேராசையாலே பெரும்பிணியுற்றேன்
சீராகவாழாமல் சிவனேநான்கெட்டேன்.

32. பொருளாசைமிகக்கொண்ட புகழிலி[illegible]னானே
அருளாசைதந்திடில் மருள்மாயும்தானே

33. உத்தமர்தான்றொழும் ஊர்விடைவாகா
கற்றவர்தினம்துதி காமாட்சிபாகா.

34. ஆதிமத்தியாந்தர் அகிதபிரபோதா
சோதியாயெனைக் காக்கவும்சூதா.

35. ஆறுபத்துடனான்காடியபாதா
வேறுபற்றுனையன்றி காணேனேதாதா

36. மாயையைக்கடந்திட்ட மைந்தனேவாவா
தாயினைக்கடைத்தேற நண்ணுவாய்பூபா.

37. அத்திமுகனையீன்றருள் சுத்தசிவபோதா
பத்திதந்தாட்கொள்ள இன்னமும்வாதா.

38. சித்தசனைவென்ற உத்தமனேராஜா
நித்தமுனைநம்பினேன் நிர்த்தனராஜா

39. அந்தகனைகொன்ற அரும்பொன்னேயப்பா
பந்தமதைநீக்கவும் பாரமேதப்பா.

40. அரக்கன்றலைநெறிந்திட அழுந்தியபாதா
இரக்கம்வைத்தடியேனை யாட்கொளவாதா.

41. சோமனைத்தேய்த்திட்ட சுந்தரபாதா
காமனையெரித்திட்ட கண்ணுதல்நாதா

42. வேதன்சிரம்கொய்த விண்ணவர்க்கரசே
பாதம்தந்தாட்கொளும் பரமனேயரசே

43. கண்[illegible]வழியைத் தந்தருள் அண்ணலே
எண்[illegible]க்கப்பாலும் இருந்திடும்வள்ளலே

44. இருவரும்கண்டிடா இரும்பதந்தாதா
ஒருவரும்துணைகாணேன் உனையன்றிநாதா

45. பழவினைநீக்கவே பட்சம்வை அய்யனே
மழவிடையேறிய மாணிக்கமெய்யனே.

46. சூரியன்பல்லினை சுறுக்குடன் ஓசித்தோனே
ஆரியர்பரவிடும் அரசனேயத்தனே.

47. கந்தரந்தன்னிலே கறைமிகவுடையாய்
அந்தரத்தில்விடாதெனை யாட்கொள்வாய்சடையாய்

48 மாண்டாரெலும்பணி மன்மதகாலா
ஆண்டெனையடிமைகொள் அப்பனேசூலா.

49. ஓங்காரந்தன்னி லுறைந்திடும்பொருளே
பாழ்ங்காலன்வராமலே பார்த்தெனையருளே.

50. பிணியினால்மெத்தவும் வாடினேன்யானே
மணிமருந்துதந்தெனைக் காத்தருள்கோனே.

51. சத்தியம்சத்தியம் முற்றிலும்நம்பினேன்
நித்தமும்வினையினால் மெத்தவும்வெம்பினேன்.

52. ஆருந்துணையில்லை யடியேற்குநாதா
பாருங்கடைக்கண்ணால் பரமனேபோதா.

53. சாமிநாதனையீன்ற சந்திரசேகரனே
காமியெனையாண்டருள் கருணாகரனே.

54. ஆதாரமுனையன்றி யாரினிஐயா
பாதாரவிந்தமே நம்பினேன்மெய்யா.

55. காலனார்வாதைக்கு கல்க்கமுற்றேனே
சூலமேகொண்டு துரத்துவாய்கோனே.

56. குற்றமேசெய்தாலும் பொறுப்பதேபாரம்
பெற்றவர்க்குண்டோ பிள்ளைமேற்காரம்.

57. வாரும்விடைமிசை வாரணமுரித்தவா
காரும்எந்தனை கங்கையைத்தரித்தவா.

58. பெற்றாரில்லாத பிள்ளைநானானேன்
உற்றாரில்லாத ஒருவனேயானேன்.

59. சந்ததம்குமரன் துதி சாயுச்யபாதா
வந்தெனைக்காக்கவே இன்னமும்வாதா.

60. குமரன்தினம்துதி கொண்டருள்மெய்யா
பிமாங்கெடப்பேசிடும் பிரணவமையா.

நாமாவளி முற்றிற்று.